RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22493

# நீல பத்மநாபனின் கவிதைகளில் நிலையாமை

சி. கிங்ஸ்லி தேவ ஜோஸ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக்கல்லூரி, மார்த்தாண்டம் - 629165, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்), தமிழ்நாடு, இந்தியா

# Impermanence in Neela Padmanabhan's Poems

C. Kingsly Deva Jose [a, *]

[a] Department of Tamil, Nesamony Memorial Christian College, Mathandam-629165 (Manonmaniam Sundaranar University), Tamil Nadu, India

* Corresponding Author: kingslydevajose@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Neela Padmanabhan made a great contribution in the form of poetry in the world of Tamil literature. Impermanence is a term used to denote the impermanence of worldly life. If we know the impermanence of this world, the body and wealth, the mind will not be disturbed and weary when separation or change occurs. Instead of running in search of false pleasures, to live by realizing the thought of the soul's reformative thoughts is found in Nilapadmanabhan's poems. These concepts are also used to regulate human life. Neelapadmanapan's poems are often spiritual and are rich in anagrams. His poems can be classified into various components. It can also be seen that all the elements written in Neelapadmanabhan's poems are manifested with spiritual qualities. He prays to Lord Kalabhairavan to protect him from nature and wrong men, Neelapadmanabhan composes poems surrendering to God after his retirement.

**Keywords:** Impermanence, Spirituality, Reformative, Thoughts, Protection

## முன்னுரை

சாகித்திய அகாதெமி விருதினை இரண்டுமுறை பெற்ற எழுத்தாளர் நீலபத்மநாபன் 21 நாவல்களைப் படைத்துள்ளார். இவரது படைப்பில் தான் பிறந்து வளர்ந்த தமிழ் புலமும் தான் புலம்பெயர்ந்து வாழும் மலையாள நகரத்தில் காணப்படும் கலாச்சாரங்களும் அங்கு நிலவும் சமூக தாக்கங்களையும் பதிவு செய்துள்ளார். நீல பத்மநாபன் தனது நாவல், சிறுகதை, கட்டுரைகளுக்கு இணையாகக் கவிதை வடிவத்திலும் சிறப்பான பங்களிப்பைச் செய்திருக்கிறார். அவரது கவிதைத் தொகுப்புகளாக ஐந்து தொகுதிகள் வெளிவந்துள்ளன. தமிழ்க்கவிதை உலகில் இயக்கமாக வெளிப்பட்ட 'எழுத்து' கவிதை இயக்கத்தின் வாயிலாக நீலபத்மநாபன் கவிதைகள் அறிமுகமாகியுள்ளன. தொடர்ந்து பல்வேறு கவிதைகளை எழுதியுள்ளார். இவரது கவிதைகளில் காணப்படும் நிலையாமை குறித்த கருத்துக்களை கட்டுரை ஆய்கிறது

## நீலபத்மநாபனின் எழுத்துலகம்

நீலபத்மநாபன் 1950-களிலிருந்து தனது இளம்வயது காலத்திலேயே எழுதத் துவங்கினார். சிறுவனாக தாத்தா-பாட்டியிடமிருந்து வாய்மொழிக் கதைகளைக் கேட்டு வளர்ந்த தாக்கத்தினால் ராஜா-ராணி கதைகளையே முதலில் எழுதினார். பின்னர் கல்லூரி நாட்களில் கையெழுத்துப் பத்திரிக்கைகள் தொடங்கி நடத்தினார். 1952 ஆம் ஆண்டு 'பதில் இல்லை' என்ற சிறுகதை ஒன்றை எழுதி பத்திரிக்கைகளுக்கு அனுப்பினார். யாரும் அதனை பிரசுரிக்காமல் திருப்பி அனுப்பினர். 1955

ஆம் ஆண்டு 'இலக்கியவட்டம்' என்ற இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்த இதழில் வெளிவந்த 'விட்டுக்கொடுத்தவன்' என்ற கதையே பத்திரிக்கையில் வெளிவந்த இவரது முதல் சிறுகதையாகும். தனது பன்னிரெண்டாவது வயதில் எழுதத்தொடங்கிய நீலபத்மநாபனுக்கு இவ்வாறாக பதினைந்து ஆண்டுகள் கழித்து 27-வது வயதில்தான் முழுமையான எழுத்துலக அங்கீகாரம் கிடைத்தது.

நீலபத்மநாபன் கதை எழுத்துக்களுடன் கவிதை இலக்கியத்திலும் தனது ஆழ்ந்த பார்வையை செலுத்தினார் என்பதற்கு அவர் எழுதிய கவிதைத் தொகுப்புகள் சாட்சியாகின்றன. கவிதையில் கதை இலக்கியம் போலவே ஐம்பது வருடங்களைத் தொடும் பாரம்பரியமிக்க கவிஞராக நீலபத்மநாபன் திகழ்கிறார். அதாவது அவர் அரைநூற்றாண்டுகாலம் கவிதை இலக்கியத்திலும் இயங்கியிருக்கிறார். சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' கவிதை இதழின் இறுதிப் பகுதியில் எழுதவந்த நீலபத்மநாபன் முதன்முதலாக 1975 ஆம் ஆண்டு 'நீலபத்மநாபன் கவிதைகள்' என்றத் தொகுதியை வெளியிட்டிருக்கிறார். அதன்பிறகு 1984 ஆம் ஆண்ட இவரது 'நாகாக்க' என்னும் இரண்டாம் கவிதை நூல் வெளிவந்தது. 1993 ஆம் ஆண்டு மூன்றாம் கவிதைத் தொகுதியாக 'பெயரிலென்ன' என்பது வெளிவந்தது. அடுத்ததாக 2003 ஆம் ஆண்டு 'நீலபத்மநாபனின் 148 கவிதைகள்' என்றத் தொகுப்பை விருட்சம் வெளியீடு வெளியிட்டது. அதன்பின் 2013 ஆம் ஆண்டு விருட்சம் வெளியீடாக 'நீலபத்மநாபனின் 43 கவிதைகள்' என்றத் தொகுப்பு வெளிவந்தது. 2016 ஆம் ஆண்டு 'கிந்தை முட்கள்' என்ற கவிதை நூல் வெளிவந்தத. 2019 ஆம் ஆண்டு விருட்சம் வெளியீடாக 'சாயங்காலமேகங்கள்' என்ற கவிதைத் தொகுதி வெளிவந்தது.

நீலபத்மநாபன் அவர்கள் ஏழு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்

1 **நீலபத்மநாபன் கவிதைகள் (1975)**
2 **நாகாக்க (1984)**
3 **பெயரிலென்ன (1993)**
4 **நீலபத்மநாபனின் 148 கவிதைகள் (2003)**
5 **நீலபத்மநாபனின் 43 கவிதைகள் (2013)**
6 **சிந்தை முட்கள் (2016)**
7 **சாயங்கால மேகங்கள் (2019)**

நீலபத்மநாபன் மத்திய அரசின் சாகித்ய அகாதமி மூன்று தொகுதிகளாக வெளியிட்டிருக்கும் 'புதிய தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் தொகுப்பிற்கு முதன்மை தொகுப்பாசிரியராக இருந்துள்ளார். இவர் தனது படைப்புகளுக்காக பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். மாநில அளவிலும் மத்திய அரசின் சாகித்ய அகாடமி போன்ற விருதுகளையும் அவர் பெற்றிருக்கிறார். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் என பல இலக்கிய வடிவங்களில் இயங்கினாலும் நீலபத்மநாபன் சாகித்திய அகாடமிக்கான விருதை நாவல் இலக்கியத்திற்காகவே பெற்றிருக்கிறார். மலையாளக் கவிஞர் அய்யப்ப பணிக்கரின் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக 2003-ஆம் ஆண்டு இவருக்கு மொழிபெயர்ப்புகான சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. இவர் எழுதிய 'இலையுதிர்காலம்' என்ற நாவலுக்காக 2008 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருதை இரண்டாவது முறையாக இவர் பெற்றார். இவ்வாறாக ஒரு தடவை மொழிபெயர்ப்புக்காகவும் இன்னொரு தடவை தனது சொந்த படைப்புக்காகவும் சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ள அபூர்வ படைப்பாளியாவார்.

## நிலையாமை

நிலையாமை என்பது உலகியல் வாழ்வானது நிலை இல்லாதது என்பதைக் குறிக்கும் ஒரு பதம் ஆகும். போர் வாழ்க்கை நிலையானது அல்ல என உணர்த்தும் விதமாக அமைந்தது காஞ்சித்திணை ஆகும். பிற்கால வழக்கில் இது மாற்றம் பெற்றது. யாக்கை நிலையில்லாதது. எனவே துறவு மேற்கொள்ளுங்கள் என அறநெறி காலத்தில் (பதினெண்கீழ்க்கணக்கு காலத்தில்)

வலியுறுத்தப்பட்டது. 'இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை' ஆகிய மூன்றுவகையான நிலையாமைக் கருத்துகள் பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளன. "வாழும் உலகம் இத்தன்மையானது. உடல் இத்தன்மையானது. செல்வம் இத்தன்மையானது என்று முன்னமே அவற்றின் நிலையாமை அறிந்துகொண்டால், பிரிவோ மாறுதலோ நேர்ந்தபோது மனம் கலங்கி வருந்திச் சோர்வடைய நேராது. ஆகையால், நிலையாமை உணர்தல் வாழ்க்கையைக் கண்டு அஞ்சி ஓடுவதற்காக அன்று. வாழ்க்கையின் தன்மையை உள்ளவாறு அறிந்து அஞ்சாமல் நின்று சோர்வற்று வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கே ஆகும்" என்று நிலையாமைக் குறித்து மு. வரதராசன் குறிப்பிடுகிறார்.

## நீலபத்மநாபன் கவிதைகளில் நிலையாமை

நீலபத்மநாபனின்; தனது கவிதைகளில் புறப்பொருளாகக் கூறுபவை அனைத்தும் அகப்பொருளில் மயக்கங்களாக மாற்றம் பெறுகின்றன. புறப்பொருள் சார்ந்த உலகங்கள் நீலபத்மநாபன் வாயிலாக ஒலி சார்ந்த உலகமாக மாறுகிறது. இவரது கவிதைகளைக் குறித்து பேராசிரியர் கி. நாச்சிமுத்து கூறும்போது, "தத்துவவாதிகள் ஒலி உலகு (சப்தப் பிரபஞ்சம்) பொருள் உலகாக (அர்த்தப் பிரபஞ்சம்) விரிவதாகச் சொல்வார்கள். இங்கு பொருள் உலகு கவிதையில் ஒலி உலகாக மாறுகிறதோ என்று தோன்றுகிறது" என்கிறார்.

## இறுதிச் சடங்கை விரும்பும் நிலை

உலகிலுள்ள எல்லா மனிதர்களும் நெருப்பு, தன்னைத் தீண்டும்போது அடையும் நிகழ்வை வெறுக்கவே செய்வர். தான் இறந்தபின்பு எரியூட்டும் நிகழ்வை வாழும் மனிதன் விரும்புவதில்லை. ஆனால் நீலபத்மநாபன் அந்தநிலை தனக்கு அளவில்லா பேரின்பம் வழங்கும் என்கிறார்.

"விழிகளைத் திறந்ததும்
பாரமெல்லாம் ஒழிந்தன
வலியெல்லாம் வழிந்தன
புயமெல்லாம் பெரும்சக்தி.
தீநாக்கு விளையாடும்
சிதை நோக்கிச் செல்கிறேன்.
பாதிதான் வேக்காடு
நெருப்பதில் நனைகையில்
அக்கினியின் சீதளம்,
அளவில்லா பேரின்பம்" (சரணாகதி, ப: 14)

சிதை நெருப்பில் எரிகையில் அளவில்லா பேரின்பத்தை அடைவதாகக் கூறுகிறார். இது மற்ற கவிஞர்கள் யோசிக்க தயங்கும் விசயமாகும் (Neelapadmanapan, 1975).

## பொய்யாகும் சுகங்கள்

மனிதன் தனது இல்லற சுகத்தை வெறுக்க தனது ஆண்மையை இழக்கும் காலம்வரையிலும் காத்திருக்கிறான். அதன்பிறகே யோகியாகி தத்துவம் பேசுகிறான் என்கிறார் நீலபத்மநாபன் தனது 'யோகி' என்ற கவிதையில்.

"இந்திரிய சுகம்

பொய்யெனத் தெரிய

இயக்க சக்தி ஓர் துளியின்றி

நசிப்பது வரைக்கும்

காத்திருக்க வேண்டி வந்த

நானல்லவா யோகி" (யோகி, ப: 34)

## ஆத்மாவை இழத்தல்

மனிதமனம் அனுபவரீதியில் சிந்திக்கும் தனிமனித இழப்பு குறித்து நீலபத்மநாபன் பல கவிதைகளில் பேசி இருக்கிறார். அவரது ஆரம்ப கால கவிதைகளில் ஒன்று 'அபகரணம்'. இக்கவிதை தன் இழப்பு சார்ந்த விசயத்தைப் பேசுகிறது.

"கள்ளையும், தேனையும் தந்து

ஆத்மாவை அபகரித்துக் கொண்டாய்,

பறிபோன ஆத்மாவை

நினைக்கவோ நேரமின்றி

கள்ளிலும், தேனிலும்

கரைந்துருகிப் போனேன்" (அபகரணம், மேலது, ப: 22)

என்ற வரிகளில் தன் சுயத்தை இழந்த மனிதன் போதைக்கு அடிமையானதையும், அதன் மூலமாக தன்னுடைய எஞ்சிய வாழ்வை கரைத்து அழிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதே உள்ளடக்கம் கொண்ட இன்னொரு கவிதை 'சரணாகதி' ஆகும். எல்லாம் இழந்த ஒரு மனிதன் தனது வீழ்ச்சியைத் தானே கூறுவது போல அமைந்துள்ளது (Neelapadmanapan, 2003).

"அடுத்தநாள் ஷிப்டுக்கு

ஆள்வரும்போது

சுட்டெடுத்த கிழங்கதாய்

பாதாளப் பொறியறையில்

பயங்கரமாய்

என் உடலம்" (சரணாகதி, மேலது, ப: 11)

என்ற கவிதை வரிகள் தான் வேலை செய்த கேரள மின்வாரியப் பணி சார்ந்த அச்சத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது. தன்னிழப்போடு தனிமனித வாழ்க்கையின் நிச்சயமின்மையைக் குறிப்பிடுகிறது

## நிலையில்லாத வாழ்க்கை

இன்மை என்பதன் பொருள் இல்லாது போதலாகும். நீலபத்மநாபன் இதையே தனது கவிதைகளில் ஆதிமுதல் அந்தம் வரையிலான இன்மையாதலின் காட்சிகளாகப் பதிவு செய்துள்ளார். 'தூக்கம்' என்ற கவிதையில்,

"ஜனனியின் கருப்பையில் மார்பின் கதகதப்பில்

கயிறுநுனி தூளியில் கிரீச்சிடும் தொட்டிலில்

தந்தையின் அரவணைப்பில் கோரைப்புல் பாயில்

சூரலிழைக் கட்டிலில் எதிர்பாலின் கிளுகிளுப்பில்

வெல்வெட் மெத்தையில் சேய்களின் ஸ்பரிசத்தில்

கோரைப்புல் பாயில் கட்டாந்தரையில்

நாலுபேர் தோள்தாங்கும் பச்சைமூங்கில் பாடையில்

இடுகாட்டு வரட்டியில் உய்விக்கும் நெருப்பில்

ஆறடிமண்ணில் அந்தரீ~ வெளியில்" (தூக்கம், மேலது, ப.1)

என்ற கவிதை வரிகளில் தாயின் வயிற்றில் கருவாக உருப்பெற்றதிலிருந்து மண்ணில் இறப்பது வரையிலான பல நிகழ்வுகள் வாழ்வில் நடந்து கொண்டே இருக்கும். ஆனால் அவன் இறந்த பிறகு வாழ்வில் நடந்த அத்தனை நிகழ்வுகளுமே இல்லாது போகும் என இக்கவிதையில் அழகாக குறிப்பிட்டுள்ளார் (Neelapadmanapan, 2013).

## ஆன்மீகம்

நீலபத்மநாபனின் கவிதைகளுக்கான பாடுபொருள் பெரும்பாலும் ஆன்மீகத்தைத் தழுவியும், அங்கதம் விரவியும் காணப்படுகின்றன. அகவயம் நோக்கிப் பயணிக்கும் அவரது கவிதைகளின்; பல்வேறு கூறுகளாகக் வகைப்படுத்தலாம். நீலபத்மநாபன் கவிதைகளில் எழுதிய அனைத்துக் கூறுகளும் கவிதையின் இயல்பாக வெளிப்பட்டாலும் ஆன்மீகப் பண்புகளைச் சுமந்து நிற்கின்றன என்பதையும் காணலாம். இயற்கையிடம் இருந்தும், தவறான மனிதர்களிடம் இருந்தும் தன்னை காப்பதற்கு இறைவனிடம் சரணமடையும் பல கவிதைகளை நீலபத்மநாபன் தனது பணி ஓய்வுகாலத்திற்கு பின்பாகப் படைத்து வருகிறார். காலபைரவன் ஆகிய இறைவனிடம் தன்னைக் காக்கும்படி மன்றாடி வேண்டுகிறார்.

"காண்டீபம் கீழ்வைத்த பார்த்தனுக்கு ஊட்டிய

ஏதிர்கொள்ளும் துளியதை

வந்து நிற்கும் வயோதிகனுக்கும் தந்தருள்

குருவான அப்பனே

உன்தாளைப் பணிகிறேன்"

மனிதனின் வாழ்க்கைப் பருவத்தில் இரண்டாவது குழந்தைப் பருவம் என்று சொல்லுகிற வயதான பருவத்தில் இறைவனிடம் வேண்டுவது இயற்கையே. அத்தன்மையேதான் நீலபத்மநாபன் குற்றசம்மதம் என்னும் கவிதையின் மூலமாக தனது வயோதிகத்தைக் கடவுளிடம் வெளிப்படையாகக் கூறி வலிமைத்தரக் கேட்கிறார். அரசுப் பணியாளர்கள் பெருமளவு தங்கள் பணி ஓய்வு காலத்திற்கு பின்னர் அதிகமாக ஆன்மீகத்தில் ஈடுபடுவதையும், அதுசார்ந்த சுற்றுப்பயணங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதையும் காணலாம். இதற்கு நீலபத்மநாபனும் விதிவிலக்கல்ல என்பதை இந்த கவிதை நிரூபிக்கிறது (Neelapadmanapan, 2013).

## இறுதி வாழ்க்கை

வாழ்வின் அந்திமத்தின் இறுதி என்பது மரணமாகும். நீலபத்மநாபனின் கவிதைகளில் மரணம் அல்லது சாவு குறிதது மிக அதிகமாகப் பேசப்படுகிறது. மரணத்தை வாழ்வின் விழைவாகப் பல இடங்களில் நீலபத்மநாபன் வேண்டியிருப்பார்.

"கைராசியுள்ள டாக்டர் வீட்டு நடையில்

என்முறைக்காகக் காத்திருந்து

காலனை தியானிப்பதைவிட

வீட்டில் நோயுடன் கட்டித்தழுவிக் கிடக்கையில்

சித்திக்கும் சாவு

ஆஹா… என்ன சுகம் கோபாலா" (நோய்ப்படுக்கை, ப: 50)

என்ற வரிகளில் ஒரு மனிதனின் இறுதிகட்ட வாழ்வு மருத்துவமனை படுக்கையில் கிடந்து அவதிப்படாமல் வீட்டிலிருந்தே மரணிப்பது சுகம் என்கிறார் என்பதை இக்கவிதையின் வாயிலாகக் காணலாம். வாழ்விலிருந்து பின்வாங்குதல் என்ற எண்ணம் நீலபத்மநாபனின் கவிதைகளில் மரணம் வரை எடுத்துச் செல்கிறது. இறுதிக்கணத்தில் எடுக்கும் முடிவுபோல அமைந்து வெளிப்படுகிறது கவிதை.

"ஆர்பரித்து வந்த எதிர் காற்றினில்

அடிபதறாதிருக்க அழுந்தக்காலூன்றிய

கட்டங்கள் கணங்கள் இல்லையென்பதில்லை,

இருப்பினும் இப்போதெல்லாம்

வந்தசுவடு தெரியாமல் போய்விடவே ஆசை" (வந்தசுவடு தெரியாமல், ப.19)

என்ற வரிகளில் எவ்வித ஆர்பாட்டமும், ஆரவாரமும் இன்றி மிக அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வாழ்ந்த தடம் தெரியாமல் உயிரை உதிர்த்து உடல் அமைதியாக அடங்கிவிடத் துடிக்கும் தனது எண்ணத்தினைக்; கூறுகிறார்.

"நான் என்ற கல்லறையில்

அகம் என்ற சிலுவையில் அடங்கிடும்

யக்ஞத்திலும் தோற்றுப் போய்

புகலிடம் கிடைக்காது ஆடிநடக்கும்

பாவாத்மா நீ!" (செக்போஸ்டுகள், ப:17)

என்ற வரிகளிலும் இவ்வுலக வாழ்விலிருந்து பின்வாங்கும் தன்மை சுட்டப்படுவதைக் காணலாம்.

## முடிவுரை

நீலபத்மநாபன் கவிதைகளில் மனித வாழ்வின் நிலையாமை குறித்தான தத்துவ சிந்தனை வரிகள் இடம்பெறுவதைக் காணலாம். மேலும் ஆன்மீகம், மற்றும் மனிதவாழ்வின் இறுதிநிலை ஆகியன குறித்து எதார்த்தமாக கூறுகின்றார். மனித வாழ்வு அற்பமானது என்பதை தனது வாசகர்களுக்கு உணர்த்தும் விதமாக எளிய நடையில் ஆழமான கருத்துக்களை பதித்து வைத்துள்ளார். நீலபத்மநாபன் மற்ற கவிஞர்களைவிட மாறுபட்ட தனது சிந்தனையின் மூலமாக தனது கவிதைகளில் பொதுவாக கூறும் மானுட வாழ்வின் நிலையாமைக் குறித்து சுட்டிக்காட்டியவற்றை இக்கட்டுரையில் தொகுத்து கூறப்பட்டுள்ளது.

## References

Neelapadmanapan (1975) Neelapadmanapan Poems, Paari Nilayam, Chennai, India

Neelapadmanapan (2003) 148 Poems of Neelapadmanapan, Vrutsam Publication, Chennai, India

Neelapadmanapan (2013) 48 Poems of Neelapadmanapan, Vrutsam Publications, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License